# القصيدة الخضريّة

**ஷெய்குனா ஸூபி ஹழ்ரத் காஹிரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள் கோர்வை செய்தது.**

بسم الله الرحمن الرحيم

لَا اِلٰهَ اِلَّا اللهُ لَا اِلٰهَ اِلَّا اللهُ

لَا اِلٰهَ اِلَّا اللهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللهِ

اَحْمَدُ اللهَ الْعَلِيْمَ الْاَبْعَدِ وَالْاَقْرَبِ

اٰتٰى عُلُوْمًا مِنْ لَدُنْهُ لِعَبْدِهٖ خِضْرِ النَّبِيْ

بَاهَى الْكَلِيْمَ بِهٖ فَقَالَ اِنِّيْ سَاُخْبِرُ

بِالَّذِيْ لَمْ تَسْتَطِعْهُ سَيِّدِيْ خِضْرَ النَّبِيْ

தூரமாகியதும், சமீபமாகியதுமான சர்வ வஸ்துகளையும் அறியும்படியாகிய அல்லாஹுத்தஆலாவை புகழ்கிறேன். அவன் தன்னுடைய அடிமை நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தன்னிடத்திலிருந்து கொஞ்சம் இல்மை கொடுத்தான். அதுகொண்டு அவர்கள் கலீமுல்லாஹ் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில், நீங்கள் விளங்கிக் கொள்ளாததால் பொறுமை செய்ய இயலாது போன சம்பவங்களின் கருத்தை, நான் உங்களுக்கு சொல்லி காண்பிக்கிறேன் என பெருமை பேசினார்கள்.

تَاهَتِ الْعُقُوْلُ عَنْ اِدْرَاكِ عِلْمِهٖ كَمَا

تَاهَ فِيْ بَاقِيْ صِفَاتِهِ وَلَوْ خِضْرُ النَّبِيْ

அவனுடைய ஏனைய சிபாத்துகளை எட்டிக் கொள்வதை விட்டும் எல்லோர்களுடைய புத்திகளும் தட்டழிந்தது போல் அவனுடைய அறிவு எனும் சிபத்தை எட்டிக் கொள்வதிலும் தட்டழிந்து போய் விட்டது. கிழ்ரு நபி அவர்களாலும் சரியே.

ثُمَّ الصَّلَاةُ وَالسَّلَامُ عَلَى النَّبِيِّ أَوَّلَا

ثَانِيًا عَلَى الصِّحَابِ آلِهِ خِضْرِ النَّبِيْ

பின்பு சலவாத்தும் சலாமும் துவக்கமாக நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரிலும், இரண்டாவதாக அவர்கள் தோழர்கள், கிளையார்கள் பேரிலும் கிழ்ரு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பேரிலும் உண்டாவதாக.

جُوْدُ الْجَوَادِ وَالنَّدٰى لِاهْتِدٰي سُبُلَ الْهُدٰي

جُلُّ الْخَلَائِقِ مِنْ رَدٰي اِحْيَاءُهُ خِضْرَ النَّبِيْ

கொடை வள்ளலாகிய அல்லாஹுத்தஆலாவின் பெருங்கொடையில் நின்றுமுள்ளதாயிருக்கும் ஜனங்கள் எல்லாம் வழிகேட்டை விட்டும் நேரான பாதையில் நேர்வழி பெறுவதற்காக அவன் நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஹயாத்தோடு வைத்திருப்பது.

حَانَ بُشْرٰي مَنْ نَحٰى بِنَحْوِ مَوْلٰى بِالْهَوَا

خِيْفَةً مِنْهُ نَهٰى لِنَفْسِهِ عَنِ الْهَوَي

خَابَ مَنْ دَسَّا لَهَا يَا غَوْثَنَا خِضْرَ النَّبِيْ

எவன் தனனுடைய எஜமானாகிய அல்லாஹுத்தஆலா பேரில் ஆசை கொண்டு அவனுடைய பாதையில் நடந்தானோ, இன்னும் அவனை பயந்து தன் நப்ஸை அதன்

இச்சையை விட்டும் விலக்கினானோ அவனுக்கு நல்மாராயமுண்டாகும். அவனுடைய பாவங்களெல்லாம் நமது இரட்சகர் நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பொருட்டால் அழிந்து போகும். ஆனால் எவன் நப்ஸை அழுக்காக்கினானோ அவன் பேர் கெட்டான்.

دَلَّتْ عَلَى الْاٰدَابِ بَيْنَ الشَّيْخِ وَالَّذِيْ يُرِيْ

دُ اِلَى اللهِ الْعَلِيِّ قِصَّةُ الْخِضْرِ النَّبِيْ

நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய சரிதையாகிறது:- ஷெய்குக்கும், முரீதுக்குமிடையிலுண்டான (ஆதாபு) ஒழுக்கங்களைப் பற்றி அறிவிக்கிறது.

ذَا لَا يَفِرُّ عَنْهُمْ اِذْ اَسْبَرُوْهُ مِثْلَمَا

الذُّبَابُ فَلْيَقُلْ كَمُوْسَى قَالَ لِلْخِضْرِ النَّبِيْ

அதாவது: இவனை (முரீதை) ஷெய்கு சோதிப்பாரேயானால் அவரை விட்டும் ஓட மாட்டான். எங்கிலும் ஈயை போல் விரட்ட விரட்ட திரும்ப வருவான். வந்து நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவாக்ள் நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் மன்னிப்பு தேடி சொன்னதுபோல் சொல்லிக் கொள்வான்.

رِدْءً مُوَافِقًا لَهُمْ لَا يَبْرَحَنْ فَاِنَّهُمْ

رُفَقَا اِلَى اللهِ لَهُ كَغَوْثِنَا خِضْرِ النَّبِيْ

மேலும் அவர்களுக்கு உதவியானவனாகவும், இணங்கினவனாகவும் நீங்காமலிருக்கவும். ஏனென்றால் அவர்கள்தான் நமது கௌது ஹிழ்ரு நபி அவர்களைப் போல் அவனுக்கு அல்லாஹுத்தஆலா அளவில் வழித்தோழர்களாகயிருக்கும்.

زِيَّ التَّوَاضُعِ يَرْتَدِيْ كَالْاَعْجَمِيْ لَا يَهْتَدِيْ

زَاوِي الْعُلُوْمَ كَالنَّبِيْ مَعْ غَوْثِنَا خِضْرِ النَّبِيْ

இன்னும் தழுமையென்னும் உடுப்பை உடுத்திக் கொள்வான். ஒன்றும் தெரியாத அஜமியைப் போலிருப்பான். தன்னுடைய கல்விகளை எல்லாம் சுருட்டி வைத்து விடுவான். நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹிழ்ரு நபி அவர்களுடன் நடந்தது போல்.

سَيْرًا بِحُوْتِ قَلْبِهِ مُمَلَّحًا بِالشَّهْوَةِ

سُبْحَانَ مَنْ اَحْيَىْ بِمَجْمَعٍ لَدَىْ خِضْرِ النَّبِيْ

சரீர இச்சையைக் கொண்டு உப்பிடப்பட்ட இறந்துபோன கல்பெனும் மீனை சுமந்துக் கொண்டு நடப்பான். மஜ்மவுல் பஹ்குரைனில் - இரு கடலும் சந்திக்குமிடத்தில் நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் போனதும் அந்த மீனை உயிராக்கிய நாயன் மகாத் தூய்யவன். அவன் இச்சையால் பீடிக்கப்பட்ட அந்த முரீதின் இறந்துபோன கல்பெனும் மீனை அவனுடைய ஷெய்கின் விலாயத்தென்னும் கடல் நுபுவ்வத்தின் கடலோடு சந்திக்கும் மஜ்மஃ - சங்கம் சந்திப்பிடத்திலுள்ள தண்ணீரை கொண்டு அதன் வின்னங்களை போக்கி உயிராக்கி வைத்தான். உயிர் பெற்றெழும்பிய கல்புக்கே சோபனம்.

شَنَارَهُ مُحَيًّ بِمَاءِ مَجْمَعِ وِلَايَةِ

شُيُوْخِهِ طُوْبٰى لَهُ كَسَيِّدِيْ خَضِرِ النَّبِيْ

ஷெய்குடன் சகவாசம் செய்வதாகிறது சீதேவித்தனமாயிருக்கும். “கூனூ மஃஸ்ஸாதிகீன்” – நீங்கள் உண்மையாளர்களுடைய சகவாசத்திலிருங்கள் - என்று குர்ஆன் ஆயத்தில் என் ஆண்டகை கிழ்ரு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ரப்பாகிய அல்லாஹுத்தஆலாவின் ஏவல் வந்திருக்கிறது.

صُحْبَةُ الشَّيْخِ سَعَادَةٌ وَفِيْ كُوْنُوْا مَعَ

الصَّادِقِيْنَ اَمْرُ رَبِّ سَيِّدِيْ خِضْرِ النَّبِيْ

ஆகையினால் ஷெய்கு இல்லாது தன்னாலேயே ஜெயம் பெற்று விடலாமென்று எண்ணுபவனின் எண்ணம் தவறு. அவன் வாழ்நாள் வீணாக போகும். ஆண்டவா! (எங்களை வீணாக போகாது) கிழ்ரு நபி அவர்களின் பொருட்டால் இரட்சித்து அருள்வாயாக.

ضَلَّ مَنْ ظَنَّ لَعَلَّهُ يَفُوزُ بِنَفْسِهِ

ضَاعَ عُمْرُهُ اَغِثْ يَا رَبِّ بِالْخِضْرِ النَّبِيْ

மல்கானுடைய மகன் கிழ்ரு நபி அவர்களுடைய வஸீயத்தை (உபதேசங்களை) சொல்ல வேண்டுமென்று ஆசிக்கிறேன். (அவையாகிறது) 1. தாலிபே நீ யாருக்கும் உபகாரியாகவே இரு. நீ பல்யாநபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பொருட்டால் ஜெயம் பெறுவாய்.

طَتَبَ لِ ذِكْرُ وَصَايَا اِبْنِ مَلْكَانٍ خَضِرُ

طَالِبًا كُنْ نَافِعًا تَفُزْ بِلْبَاءِ النَّبِيْ

ظُنَّ حَسَنًا لَا نُعَيِّرُ مُذْنِبًا اِذَا نَدِمُ

ظَعْنَكَ لِغَيْرِ وَطَرٍ دَعْوَرُمْ خِضْرُ النَّبِيْ

2. எவரையும் பற்றி நல்லெண்ணம் வை. 3. பாவம் செய்து பின் அல்லாஹ் இடத்தில் சலித்து தவ்பா செய்தவனை பழிக்காதே. 4. தேவைக்கல்லாது ஓரிடத்திற்கும் பிரயாணம் செய்யாதே. நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொல்வதை நாடி கவனி.

عَابِسًا وَغَاضِبًا ثُمَّ ضَرِيْرًا لَا تَكُنْ

عَنْ ذُنُوبِكَ ابْكِ تُرْحَمْ الصَّفِيْ خِضْرِ النَّبِيْ

5. கடுகடுத்தவனாகவும், கோபிக்கிறவனாகவும், தீங்கு செய்கிறவனாகவும் இருக்காதே. 6. உன்னுடைய பாவங்களை பற்றி எப்போதும் அழுது கொண்டு இரு. பரிசுத்த நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பொருட்டால் உனக்கு கிருபை செய்யப்படும்.

غُنْيَةَ الْيَوْمِ فَلَا تُأَخِّرَنْ اِلَى الغَدِ

غُضَّ عَمَّا لضايُعَانِيْ جُّحْزَبِالْخِضْرِ النَّبِيْ

7. இன்று கிடைத்த வாய்பபை ஒரு பெரும் வாழ்வென்று எண்ணி அதில் நல்ல அமல்களை செய்து கொள். நாளைக்ﷺகு செய்வோம் என்று பிற்படுத்தாதே. 8.தேவை அல்லாததில் தலையிடுவதை விட்டும் உன்னை காத்துக் கொள். நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பொருட்டால் உனக்கு நற்கூலி கொடுக்கப்படும்.

فَاهَ مُوْسٰي اِلَّافِى اللهِ فضاِيَّاكَ الْغَضْبِ

فَاتْرُكَنْ حُبَّ الدُّنَايَا سَيِّدِيْ خِضْرَالنَّبِيْ

நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள்:- 1. அல்லாஹ்வின் விஷயத்திலே அல்லாது கோபிப்பதை பற்றி எச்சரிக்கை செய்கிறேன். 2. துன்யாவின் ஆசையை விட்டு விடுங்கள். என் நாயகமே! கிழ்ரு நபியே!

قُلْتَ رَبِّيْ اَخِلْنَّا مُدْخَلَ صِدْقٍ وَقَدْ

قَوْمَنَا عَنْ مُخْرِجٍ صِدْقٍ لَدَيْ خِضْرِ النَّبِيْ

நான் சொல்கிறேன்:- ஆண்டவனே! எங்களை உண்மையான புகுதும் தலத்திலே புகுதுவதை எங்கள் ஜனங்களை உண்மையான புறப்படும் தலத்தின் வழியாக கிழ்ரு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் இழுத்துக் கொண்டு போ.

كُلَّ خَيْرٍعَاجِلًا وَّاٰجِلًا مَانَعْلَمُ

كُلَّ مَالَمْ تَعْلَمُ نَدْعُوْكَ بِالْخِضْرِ النَّبِيْ

ஆண்டவனே! நீ, எங்களுக்கு துன்யாவிலும் ஆகிரத்திலும் நாங்கள் அறிந்தும் அறியாததுமாகிய எல்லா நன்மைகளையும் தரவேண்டுமென்று நாங்கள் கிழ்ரு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பொருட்டைக் கொண்டு உன்னிடத்தில் துஆ கேட்கிறோம்.

لِلرِّضَاءِ طَالِبِيْنَ لِلْبَلَايَا صَابِرِيْنْ

لِلْعَطَايَا شَاكِرِيْنْ بِحُرْمَةِ الْخِضْرِ النَّبِيْ

உன்னுடைய பொருத்தத்தை தேடினவர்களாகவும் உன்னுடைய பலாய்களின் பேரில் சப்று செய்தவர்களாகவும், நீ செய்த நிஃமத்துகளின் பேரில் உனக்கு நன்றி செய்தவர்களாகவும் நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சங்கையைக் கொண்டு கேட்கிறோம்.

مَشَاءَ اللهُ لَا قُوَّةَ اِلَّا بِاللهِ لْأعَظِيْمْ

مَاشَاءَ اللهُ فَاصْرِفَنَّ السُّوْءَ بِالْخِضْرِ النَّبِيْ

மாஷா அல்லாஹ் - அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கும் கனம்தங்கிய அல்லாஹ்வைக் கொண்டே அல்லாது ஒரு வகையான வலிமையும் கிடையாது. மாஷாஅல்லாஹ் - அல்லாஹ்தஆலாவின் நாட்டப்படியே நடக்கும். ஆண்டவனே! கிழ்ரு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பொருட்டால் எங்களை விட்டும் தீங்கை அகற்றி விடுவாயாக!

نَقِّ قَلْبَنَا عَنِ الْاَغْيَارِ وَامْلَأَنَّهُ

نُوْرًا وَعِرْفَانًا بِجَاهِ سَيِّدِيْ خِضْرِ النَّبِيْ

ஆண்டவனே! எங்கள் நாயகம் கிழ்ரு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய மகிமையின் பொருட்டால் எங்கள் ஹிருதயத்தை வேற்றுமைகளை விட்டும் பரிசுத்தமாக்கி வைத்து அதிலே பிரகாசத்தையும் நஜாத்தையும் கொண்டு நிரப்புவாயாக!

وَسِّعَنْ اَرْزَاقَنَا وَاَصْلِحَنْ اَحْوَالَنَا

وَحَسِّنَنْ خِتَامَنَا بِحُرْمَةِ الْخِضْرِ النَّبِيْ

ஆண்டவனே! நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவாக்ளின் சங்கையைக் கொண்டு எங்களுடைய இரணத்தை விஸ்தீரமாக்கு! எங்கள் நிலைமைகளை இணக்கமாக ஆக்கிவை. எங்கள் ஒடுக்கத்தை நல்முத்திராங்கத்துடனே (கலிமா ஷஹாதத்துடனே) ஆக்கி வை.

هَاعَبِيْدُكَ سَأَلْنَاكَ فَلَاتَلُرُدَّنَا

هَبْلَنَا فَوْقَ الْمُنَا بِحُرْمَةِ الْخِضْرِ النَّبِيْ

இதோ உனது அடியார்கள் உன்னிடத்தில் கேட்கிறோம். எங்களை விரட்டிவிடாதே! எங்களுக்கு கிழ்ரு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சங்கையை கொண்டு எங்கள் எண்ணத்துக்கு மேல் கொடு.

لَالَنَا سِوَاكَ مَوْلَا لَانَفِرُّ مِنْكَ اَصْلًا

لَامَلَاذَ اِلَّا اَنْتَ فَاحِمْ بِالْخِضْرِ النَّبِيْ

ஆண்டவா! எங்களுக்கு உன்னல்லாது நாயனில்லை. நாங்கள் ஒருபோதும் உன்னைவிட்டு அகலமாட்டோம். நீயே அல்லாது வேறு தஞ்சமில்லை. ஆகையினால் நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்காக எங்களை காத்தருள்வாயாக!

يَااِلٰهِيْ صَلِّ سَلِّمْ مَعْ تَحِيَّاتٍ عَلَى

يٰسٓ سِرِّ الذَّاتِ اٰلٍ صَحْبِهٖ خِضْرِ النَّبِيْ

ஆண்டவனே! உனது தாத்தின் இரகசியமாகிய யாஸீன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரிலும்,அவர்களுடைய கிளைஞர்கள்,தோழர்கள் பேரிலும் நபி கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பேரிலும் காணிக்கையோடு சலவாத்தும், சலாமும் சொல்வாயாக! ஆமீன்.